திரு. வி. கே. கோதண்டராமன் : கேள்வி கேட்பதற்கு இரண்டு முறைகள் அனுமதிக்க வேண்டும். ஒரு முறை மாத்திரம் தான் அனுமதித்து இரண்டாம் முறை அனுமதிக்க முடியாது என்று சொல்வது நியாயம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணை நிதி நிலை அறிக்கை வரவிருக்கிறது. அதிலே நீங்கள் பேசிக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மூலக் கேள்வியைப் போட்டவர்களே அவர்கள்தான், என்ற அடிப்படையில் அவ்வளவு கேட்டதற்கு, மறுபடியும் அனுமதி வழங்க வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்திலே சொன்னார்கள் விலைவாசி ஏறியதற்குக் காரணம் வியாபாரிகள், அந்த வியாபாரிகள் விஷயத்திலே சர்க்கார் மாத்திரம் கவனம் செலுத்தினால் போதாது, பொது மக்களும் கவனம் செலுத்த வேண்டுமென்று சொன்னார்கள். இது வரவேற்கக் கூடியது. விலைவாசி ஏறுகிறபோது பொது மக்கள் எதிர்த்துக் கிளர்ச்சி செய்தால் அடக்கு முறை வருகிறது. அப்படி அடக்குமுறையை ஏவி விடாத அளவுக்கு விட்டால் பொது மக்களே விலை ஏறாமல் பார்த்துக் கொள்ளட்டும் என்ற வகையில் ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இது நிலப்பறி கிளர்ச்சி போல "ஹோட்டல் பறி கிளர்ச்சி" ஆகிவிடும், நிதி அமைச்சர் அவர்கள், பொது மக்களும் கவனம் செலுத்த வேண்டுமென்று சொன்னதற்குக் காரணம், எங்கெங்கே வியாபாரி கள் விலையை ஏற்றுகிறார்களோ, அதைப்பற்றி அரசாங்கத்தினுடைய பிரதிநிதிகள் மூலம் சட்டமன்றத்திலோ அல்லது மற்ற நேரங் களிலோ அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதைப் பற்றி அரசு பொது மக்களோடு இணைந்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்பதுதான். அதை விட்டு விட்டுப் பொதுமக்களே சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை.

Resources for plan projects.

*91 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Planning Commission has invited the suggestions from the State Government on the question of mobilisation of resources for plan projects; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : திட்டப்பணிகளுக்கான நிதி வாயில்களைத் திரட்டுவது பற்றி, தமது கருத்துக்களை நல்குமாறு மாநில அரசைத் திட்டக் குழு திட்டவட்டமாகக் கேட்கவில்லை.

1970 ஆகஸ்ட் 28]

ஆனால், புதிய வரி விதித்தல், நடைமுறையில் உள்ள வரி வீதங்கள் அண்டை மாநிலங்களின் வரி வீதங்களை ஒத்திருக்கும் வகையில் அமைத்தல், பாசன வீதங்களையும், மின்சக்திக் கட்டணங்களையும், தீர்வைகளையும் மாற்றியமைத்தல் ஆகியவை உட்பட பல்வேறு வகைகள் மூலம் கூடுதல் நிதி வாயில்களைத் திரட்டுவது குறித்த சாத்தியக் கூறுகளைப் பரிசிலனை செய்யுமாறு மாநில அரசுக்கு அது ஆலோசனை வழங்கியுள்ளது. மேலும், (மாநில அரசுப் பரிசுச் சீட்டுகள்) பணித்திட்டங்களுடன் இணைக்கப்பட்ட கையடைத் தொகைகள், கடன்கள் (கடனீட்டு ஆவணங்கள் உள்பட) போன்ற கிராமப்புறச் சேமிப்புகளைத் திரட்டுவதற்கான சிறப்புத் திட்டங்களைக் கொண்டு வருவது குறித்து வாய்ப்புகளைப் பரிசிலனை செய்யுமாறும் மாநில அரசுக்குத் திட்டக் குழு ஆலோசனை வழங்கியுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : அந்த யோசனையின்மீது மாநில அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பொதுவாக நிதி வாயில்களைத் திரட்டுவதற்கான யோசனைகள்தான் இவை. அடிக்கடி நிதி வாயில்களைத் திரட்டுவதற்காக மாநில அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் முயற்சிகளை மேற்கொள்கின்றன. இவை பொதுவான யோசனைகள். அதிகமான வரி போடுவது, மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவது, பொது நிறுவனங்களிலே லாபம் பெருகச் செய்வது இப்படி யெல்லாம் இருக்கின்றன. நிஜலிங்கப்பா கமிட்டி, வெங்கட்டராமன் கமிட்டி யெல்லாம் யோசனை சொல்லி இருக்கிறார்கள். நான் எடுத்துக் கொண்ட முயற்சி கடந்த பட்ஜெட்டிலே சிறிய வரி விதிப்புகளின் மூலமாக ஏறக்குறைய ஐந்தரைக் கோடி ரூபாய் பெறக்கூடிய அளவிலே செய்ததாகும்.

தமிழ் நாடு முதல் அமைச்சர் நிதி

* 92 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1969–70-ல் தமிழக முதல் அமைச்சர் நிதி எவ்வளவு சேர்ந்துள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : முதலமைச்சரின் மாநிலத் துயர்தணிப்பு நிதியில் 1969-70 ஆண்டில் 1,19,821.63 சேர்ந்துள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த முதல் அமைச்சர் நிதி 1969–70-ம் ஆண்டில் எந்த எந்த வகையிலே செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : 1969–70-ம் ஆண்டிலே ரொம்ப முக்கியமாக ஒரு காரியத்திற்கு மட்டும்—எல்லைப்புற காந்தி கான் அப்துல் கபார் கான் அவர்களுக்கு—இந்த முதலமைச்சர் நிதியிலிருந்து 1 லட்ச ரூபாய் வழங்கப்பட்டது. முதலமைச்சர் நிதி என்பதே பொதுமக்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டிருப்பதுதான். இது 1967-ம் ஆண்டிலே மாண்புமிகு அண்ணா அவர்களால் துவங்கப